இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 76 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஐப்பசி 10 – திங்கள்கிழமை 27 அக்டோபர் 2025 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 76 : Thiruvalluvar Year - 2056 - Ayppasi 10 - Monday 27 October 2025 - Trichy ★★ 16 Pages ₹ 5.00

## நிதிஷ்குமாரை பா.ஜ.க. கடத்திச் சென்றுவிட்டது!

### தேஜஸ்வி யாதவ் பேட்டி!



பாட்னா, அக். 27 -

நிதிஷ் குமாரை பா.ஜ.க. கடத்திச் சென்று விட்டது என்றும், தேசிய ஜனநாயகக் கூட்டணி மீண்டும் ஆட்சிக்கு வந்தாலும் அவரை பிஹாரின் முதல்வராக்க மாட்டார்கள் என்றும் ராஷ்ட்ரிய ஜனதா தளம் கட்சியின் தலைவரும், மகா கூட்டணியின் முதல்வர் வேட்பாளருமான தேஜஸ்வி யாதவ் தெரிவித்தார்.

சஹர்சா மாவட்டத்தில் நடந்த பேரணியில் பேசிய தேஜஸ்வி யாதவ், "தேர்தலுக்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களே பிஹார் முதல் வரை முடிவு செய்வார்கள் என்று அமித் ஷா தெளிவுபடுத்தியுள்ளார். தேசிய ஜனநாயகக் கூட்டணி மீண்டும் ஆட்சிக்கு வந்தாலும் நிதிஷ் குமாரை முதல்வராக்க மாட்டார்கள்.

அந்தக் கூட்டணி இப்போது நிதிஷ் குமாரின் கட்டுப்பாட்டில் இல்லை. நிதிஷ்குமார் பிஹாருக்கு வெளியில் இருந்து செயல்படும் நரேந்திர மோடி மற்றும் அமித் ஷாவால் கடத்தப்பட்டுள்ளார். வரவிருக்கும் இந்தத் தேர்தலில் வெளியாட்களுக்கு வாக்களிக்காமல், ஒரு பிஹாரிக்கு வாக்களிக்க வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார்.

## மோன்தா புயல்:

## முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!

### அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தகவல்!

சென்னை, அக். 27 -

'மோன்தா புயல்' உருவாக வாய்ப்பு இருக்கும் நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆட்சியர்களுக்கு அறிவுறுத்தியுள்ளதாக அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் பேட்டி அளித்துள்ளார். ஆந்திராவை நோக்கி நகரும் 'மோன்தா' புயலின் தாக்கத்தால் சென்னை, வடக்கு மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு உள்ளது.

நடப்பாண்டில் பருவமழை அதிகமாக பெய்யும் என எச்சரித்துள்ளதால் அதற்கேற்ப ஏற்பாடுகளை செய்துள்ளோம். கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களை கரைக்கு திரும்ப அறிவுறுத்தி உள்ளோம்.

அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடும்போது கரையோர மக்களுக்கு எச்சரிக்கை கொடுத்து வருகிறோம். தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.10.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், காஞ்சிபுரம் மாநகர கழகம் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் காஞ்சிபுரம், கே.டி.எஸ். மணி மாளிகை மேட்டுத் தெருவில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் வெண்கலச் சிலை, கலைஞர் நூற்றாண்டு அரங்கம் மற்றும் காஞ்சிபுரம் மாநகரக் கழக அலுவலக புதிய கட்டடம் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அண்ணா அறிவாலயத்திலிருந்து கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, மற்றும் தலைமைக் கழக நிர்வாகிகள், காஞ்சிபுரத்திலிருந்து அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், ஆர்.காந்தி, காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., க.செல்வம் எம்.பி., சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. மற்றும் மாநகரக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## பருவமழை தீவிரம்: போர்க்கால அடிப்படையில்

# அடையாறு ஆற்றின் முகத்துவாரத்தினை அகலப்படுத்தும் பணி தீவிரம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நடவடிக்கை!

சென்னை, அக். 27 -

**அடையாறு ஆற்றின் முக துவாரத்தில் உள்ள மண் படுகைகளை வடகிழக்கு பருவ மழை துவங்கும் முன்பு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நீர்வளத்துறையினரால் செப்டம்பர் 2025 முதல் அக்டோபர் மாதம் வரை தூர்வாரி அகலப்படுத்தப்பட்டு வருகிறது. முகத்துவாரம் மண் படுகையினால் மூடப்படும் நிகழ்வானது கடல் அலைகளினால் தொடர்ந்து நடை பெறும் நிகழ்வாகும்.**



இந்நிலையில் வடகிழக்கு பருவ மழை தீவிரமானதால் முதலமைச்சர் அவர்கள் 24.10.2025 அன்று அடையாறு முக துவாரத்திற்கு திடீராய்வு மேற்கொண்டு நீர்வளத் துறையினரால் 3 பொக்லைன் கொண்டு தூர்வாரப்படும் அடையாறு ஆற்றின் முக துவாரத்தை அகலப்படுத்தும் பணியினை கூடுதல் இயந்திரங்களை பயன்படுத்தி போர்க்கால அடிப்படையில் மண் திட்டுக்களை அகற்றி அடையாறு வெள்ள நீர் விரைவாக வடிய ஆணையிட்டார்.

இதனைத் தொடர்ந்து 24.10.2025 அன்று மாலையில் இருந்து படிப்படியாக இயந்திரங்கள் எண்ணிக்கையினை உயர்த்தப்பட்டு தற்போது 12 பொக்லைன் இயந்திரங்களும் 4 ஜேசிபி (JCB) இயந்திரங்களுண்டு போர்க்கால அடிப்படையில் நீர்வளத்துறையினரால் அடையாறு ஆற்றின் முக துவாரத்தின் மண் திட்டுகளை அகற்றி அகலப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

இப்பணிகளின் முன்னேற்றத்தினை நீர்வளத்துறை அரசு செயலர் ஜெயகாந்தன், முதன்மை தலைமைப் பொறியாளர் பொறி.கோபால கிருஷ்ணன், தலைமைப் பொறியாளர் பொறிசி.பொதுப் பணி திலகம், கண்காணிப்பு பொறியாளர் பொறி. க.செல்வகுமார் அவர்களால் பார்வையிட்டு, இப்பணிகளின் முன்னேற்றத்தினை தொடர்ந்து கண்காணிக்க கண்காணிப்பு பொறியாளர் பொறி.க.செல்வகுமார் தலைமையில் சிறப்புக் குழு அமைத்து செயற்பொறியாளர் பொறி.கோ.ரா.ராதாகிருஷ்ணா, உதவி செயற்பொறியாளர் பொறி.மகேந்திரகுமார் மற்றும் உதவி பொறியாளர் பொறி.ஆர்.சதீஷ்குமார், கிருஷ்ணா குடிநீர் சிறப்பு திட்ட கோட்டத்தில் இருந்து கூடுதலாக மூன்று களப்பொறியாளர்களை நியமித்து பணிகளை விரைந்து முடிக்க ஆவனம் செய்யப்படுகிறது.

## வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வுப் பகுதி வலுப்பெற்றது!

சென்னை, அக். 27-

வங்கக் கடலில் நிலவி வந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெற்றது. தென்கிழக்கு வங்கக்கடலில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி மேற்கு திசையில் நகர்ந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றது.

தொடர்ந்து மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து நாளை ஆழ்ந்த காற்றழுத்த மண்டலமாக வலுவடையும்.

இன்று (அக்.27ம் தேதி) தென்மேற்கு மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக்கடலில் புயலாக வலுப்பெறும். சென்னைக்கு 990 கி.மீ. கிழக்கு தென்கிழக்கில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் மையம் கொண்டுள்ளது. வங்கக்கடல், அரபிக்கடல் இரண்டிலும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் மையம் கொண்டுள்ளது.

## நெல்லை மாவட்டத்தில் அதிகபட்ச மழை!

நெல்லை, அக். 27-

கடந்த 24 மணிநேரத்தில் நெல்லை மாவட்டம் ஊத்து பகுதியில் 14 செ.மீ., நாலு முக்கு பகுதியில் 13 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

நெல்லை மாவட்டம் காக்காச்சி 11 செ.மீ., மாஞ்சோலை, பாலமோர் (குமரி) தலா 9 செ.மீ. மழை பதிவானது.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 65,500 கனஅடியாக நீடிப்பு!

சேலம், அக். 27-

மேட்டூர் அணைக்கு நீர் வரத்து 65,500 கனஅடியாக நீடிப்பு; நீர் வெளியேற்றமும் 65,500 கனஅடியாக நீட்டிக்கப்பட்டு வருகிறது. டெல்டா பாசனத்துக்காக 22,300 கனஅடி நீரும், 16 கண் மதகு வழியாக 42,700 கனஅடி நீரும் வெளியேற்றப்பட்டு வருகிறது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் 120 அடியாகவும் நீர் இருப்பு 93.47 டி.எம்.சி.யாக வும் உள்ளது.

மேட்டூர் அணையிலிருந்து கிழக்கு, மேற்கு கால்வாய் வழியாக 500 கனஅடி நீரும் வெளியேற்றப்படுகிறது.

## அதானி நிறுவனத்துக்கு விதிமுறைகளை காற்றில் பறக்கவிட்டு

# எல்.ஐ.சி.யின் ரூ.35 ஆயிரம் கோடி நிதி தாரைவார்ப்பு!

## 'தி வாஷிங்டன் போஸ்ட்' பரபரப்புத் தகவல்!

*வாஷிங்டன், அக். 27 -*

*ஒன்றிய அரசின் பொதுத்துறை நிறுவனமான எல்.ஐ.சி.யின் 35 ஆயிரம் கோடி ரூபாய் நிதியை அதானி நிறுவனத்திற்கு மோடி அரசு தாரைவார்த்துள்ளதாக, 'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை பரபரப்பு தகவலை வெளியிட்டுள்ளது.*

*இந்தியாவின் இரண்டாவது பெரும் கோடீஸ்வரரான தொழிலதிபர் அதானி, இந்திய பங்குச்சந்தையில் பெரும் மோசடியில் ஈடுபட்டதாக அமெரிக்காவை சேர்ந்த பிரபல ஆய்வு நிறுவனமான ஹிண்டன்பர்க் பரபரப்பு குற்றச்சாட்டுகளை கடந்தாண்டு கூறியது.*

*இந்நிலையில், அந்த பரபரப்பு அடங்குவதற்குள் அதானி மீது மேலும் அதிர்ச்சியூட்டும் குற்றச்சாட்டுக்களை அமெரிக்காவிலிருந்து வெளியாகும் பிரபல பத்திரிகையான வாஷிங்டன் போஸ்ட் வெளியிட்டுள்ளது.*

*அதில், ஒன்றிய அரசின் பொதுத்துறை நிறுவனமான எல்.ஐ.சி.யின், 35 ஆயிரம் கோடி ரூபாய் நிதியை அதானி நிறுவனத்திற்கு மோடி அரசு தாரைவார்த்துள்ளதாக கூறியுள்ளது. அதானிக்கு சொந்தமான துறைமுக நிறுவனம் கடுமையான கடன் நெருக்கடியில் தத்தளித்து கொண்டிருக்கும் நிலையில், 35 ஆயிரம் கோடி ரூபாய் எல்.ஐ.சி. நிதியை அதானி நிறுவனத்திற்கு மோடி அரசால் வாரி வழங்கப்பட்டதாகவும் வாஷிங்டன் போஸ்ட் அதிர்ச்சியை தகவலை வெளியிட்டுள்ளது.*

**அதிகாரிகள் உடந்தை!**

*ஒன்றிய நிதியமைச்சகத்தின் பல்வேறு விதிமுறைகளை காற்றில் பறக்கவிட்டு, பிரதமர் மோடியின் நெருங்கிய நண்பரான அதானி நிறுவனத்தின் பங்குதாரராக எல்.ஐ.சி. சேர்க்கப்பட்டு, 35 ஆயிரம் கோடி ரூபாய் நிதியை அதானி நிறுவனத் திற்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. அதானி நிறுவனத்துக்கு இவ்வளவு பெரிய நிதியை வழங்கியதில் ஒன்றிய நிதியமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் எல்.ஐ.சி.யின் பணியாற்றும் மூத்த அதிகாரிகளே உடந்தையாக இருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.*

*இதேபோன்று, நிதி ஆயோக் மற்றும் ஒன்றிய நிதியமைச்சகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பிறகே, அதானி குழுமத்துக்கு 35 ஆயிரம் கோடி ரூபாய் நிதி, வாரி வழங்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், தனது நண்பரான*

The Washington Post

*அதானிக்கும், அவரது குழுமத்துக்கும் எப்போதெல்லாம் நெருக்கடிகள் ஏற்படுகிறதோ, அப்போதெல்லாம் இந்திய அரசு உதவுவதாகவும் வாஷிங்டன் போஸ்ட் தெரிவித்துள்ளது.*

**ஒன்றிய அரசு விளக்கம் அளிக்கவேண்டும்!**

*நடப்பு நிதியாண்டில் கடந்த ஜூன் மாதத்துடன் முடிவடைந்த அறிக்கையின் படி, அதானி குழுமத்தின் ஒட்டுமொத்த கடன் 20 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும், இதை அடிப்படையாக வைத்தே ஒன்றிய அரசு அதானி நிறுவனத்துக்கு தாராளமாக நிதியை வழங்கியுள்ளதாகவும் பரபரப்பு தகவல் வெளியாகியுள்ளது.*

*இந்தியாவின் கோடிக்கணக்கானவர்களின் நம்பிக்கையை பெற்றுள்ள பொதுத்துறை நிறுவனமான எல்.ஐ.சி.யின் நிதியை அதானி நிறுவனத்துக்கு தாரைவார்த்தது குறித்து ஒன்றிய அரசு விளக்கம் அளிக்கவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.*

## ஆந்திராவின் காக்கி நாடா அருகே

## மோன்தா புயல் கரையைக் கடக்கும்!

### வானிலை ஆய்வு மையம் தகவல்!

புதுடெல்லி, அக். 27 -

ஆந்திராவின் காக்கி நாடா அருகே மோன்தா புயல் தீவிர புயலாக கரையை கடக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.

தென்கிழக்கு வங்கக்கடலில் அக்டோபர் 24 அன்று உருவான புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி, விரைவாக வலுவடைந்து ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக மாறியுள்ளது. இந்திய வானிலை ஆய்வு மையம் (ஐ.எம்.டி.) வெளியிட்ட அறிக்கையின்படி, தென்கிழக்கு வங்கக்கடலில் உள்ள மேல் காற்று சுழற்சி காரணமாக இந்தத் தாழ்வு உருவானது. இது மேற்குவடமேற்கு திசையில் நகர்ந்து, 24 மணி நேரத்தில் மேலும் தீவிரமடைந்தது.

அது மேற்கு வடமேற்கு திசையில் மெதுவாக நகர்ந்து, தென்கிழக்கு மற்றும் அதனையொட்டிய மத்திய வங்கக்கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும், தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும் வலுப்பெற்றுள்ளது, அதனையடுத்து இன்று (27 ஆம் தேதி - திங்கட்கிழமை) புயலாகவும் வலுவடையும் எனவும் வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

வங்கக்கடலில் உருவாகும் மோன்தா புயல் ஆந்திராவை நோக்கி நகரும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஆந்திராவின் மச்சிலிப்பட்டணம் விசாகப்பட்டினம் இடையே மோன்தா புயல் கரையை கடக்க வாய்ப்புள்ளது. புயல் ஆந்திராவை நோக்கி நகர்ந்தாலும் நாளை (28ந்தேதி) சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.